**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.846/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | மீஹா, வயது 47 |
| Father Name/Husband Name | : | ராமசுவாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of July 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

<u>**முதல் விசாரணை**</u>

1 நான் தற்போது கோவில்பட்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 02.09.2025 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு த.கா ரமேஷ், த.கா சுமித்ரா, தலைமை காவலர் சுரேந்திரன் ஆகியோர் சகிதம் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து செய்து 07.00 மணிக்கு கோவில்பட்டி, லட்சுமிமில் பாலம் அருகே நின்று கொண்டிருந்த வைத்து பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த மணிராஜ், வயது 49, த.பெ கருப்பையா என்பவர் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்குபையை சோதனை செய்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Black golden choice brandy 18 எண்ணம், சுமார் 180 ML அளவு கொண்ட Top star brandy 10 எண்ணம், மொத்தம் 28 எண்ணம் வைத்திருந்ததை 08.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றி நிலையம் 08.30 மணிக்கு வந்து நிலையகுற்ற எண். 88/2025, சட்டபிரிவு 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் முருகதாஸ் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளை விசாரணை செய்து வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பியும், நீதிமன்றம் மூலம் தடய அறிவியல் ஆய்வாளர்

அவர்களுக்கு அனுப்பியும், இவ்வழக்கில் சம்பவம் உண்மை என புலனனாதால் எதிரியை நிலையத்தில் வைத்து கைது செய்து நிலைய பிணையில் விடுவித்து 19.09.2025 ஆம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எதிரி மீது 10 முன்வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. **(அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.5 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும் மற்றும் சுமார் 180 ML அளவு கொண்ட Black golden choice brandy பாட்டில்கள் 18 எண்ணம் அ.சா.பொ.1 ஆகவும், சுமார் 180 ML அளவு கொண்ட Top star brandy பாட்டில்கள் 10 எண்ணம் அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2 இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் முருகதாஸ் ரோந்துக்கு செல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் வைத்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதாக ஆவணங்கள் இருந்தால் அது பொய்யானது என்றால் சரிதான், அத்தாட்சியில் வழக்கு சொத்துக்களை சம்பவ இடத்தில் வைத்து த.கா ரமேஷ் என்பவரால் கைப்பற்றப்பட்டு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதை உதவி ஆய்வாளர் முருகதாஸ் என்பவர் படிவம் 91 ல் பெற்றுள்ளார்.

3 படிவம் 91 ல் சம்பவ இடத்தில் வைத்து உதவி ஆய்வாளர் முருகதாஸ் வழக்கு சொத்தை கைப்பற்றியதாக குறிப்பிடபட்டுள்ளதால் படிவம் 91 போலியானது என்றால் சரியல்ல, எழுத்து பிழையாக அவ்வாறு உள்ளது. அத்தாட்சி மற்றும் படிவம் 91 ல் முதலில் 07.00 மணி என்று குறிப்பிடபட்டு பின்பு 08.00 மணி என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் எழுத்துபிழையால் திருத்தப்பட்டுள்ளது. எதிரியிடமிருந்து பணம் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான், இவ்வழக்கானது அரசு அனுமதித்த அளவைவிட அதிகமான மதுபாட்டில்களை எதிரி கைவசம் வைத்து விற்பனைக்கு வைத்திருந்ததால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4 அத்தாட்சியில் வெள்ளை நிற சாக்குப்பை குறித்து எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரியை எந்த திசையில், எந்த இடத்தில் வைத்து கைது செய்தார்கள் என்று அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான், பார்வை மகஜர் மற்றும் வரைப்படத்தில் தெளிவாக குறிப்பிடபட்டுள்ளது. பொதுமக்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் அவர்கள் முகவரியை தராமல் கலைந்து சென்றதாலும், சாட்சியாக முன்வரவில்லை என்பதாலும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை.

5 நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.